உ

ஓம்:

ஸ்ரீ சற்குருவே துணை.

13 JUL 1981

ஞானக்க[illegible]ம்ப[illegible]

ஸ்ரீலஸ்ரீ: கட்டிக்குளம் சுவாமிகளென வழங்கும்,

சூட்டுக்கோல்

மாயாண்டி சுவாமிகளின்

பாதசேகாருளொருவரான, மதுரை ரிட்டயர்ட் போலீஸ்

சப் இன்ஸ்பெக்டர்,

R. செல்லம் பிள்ளையால்,

இயற்றப்பட்டது.

மதுரை, ராஜா பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1931

[காபிரைட்

Q2:417
N31
170492

ஓம்.

ஹரி ஓம், நன்றாக, குருவாழ்க, குருவே துணை.

181·48

முகவுரை.

பெரியோர்களான மகான்களின் பாத தெரிசன பலத்தைக் கொண்டு ஞானக்கதம்பம் என்னும் இச் சிறு நூலை இயற்றினேன்.

எவரும் எளிதாய்த் தெரிந்து தெளிவடைந்து சன்மார்க்க வழியில் நடந்து மனத்தூய்மை பெற்றுய்யும் பொருட்டுத் தெய்வ பயம், தெய்வபக்தி, உண்மை, பொறுமை, தாழ்மை, தானம், உயர் குலம், நாற்படிவிரிவுரை, சற்சங்கம், கல்வி, அன்பு, ஈசனை நாடும் பலன், மெய்ஞ்ஞானிமகிமை, என்ற 13 பொருளடக்கம்வைத்துப் பெரியோர்களின் மகா வாக்கியங்களை அவைகளுக்கு ஆதாரமாக ஆங்காங்கே எடுத்துக்காட்டிச் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.

இப்படிச் சன்மார்க்க வழியில் நடந்தால் மனம் தூய்மையடையும், அதாவது துராசை கொண்டலையாமல் மனது அடங்கும். அப்படிமனம் அடங்கி அறிவோங்கிய பக்குவிகளுக்கு "மரம் பழுத்தால் வௌவாலைவாவென்று கூவி இரந்தழைப்பார் யாவருமங்கில்லை" என்று ஔவையார் நல்வழியில் கூறியபடி குருநாதன் தானே வந்து அருள்பாலித்து முத்தியடையும்படி செய்வார். மனதை அடக்கி, சன்மார்க்கவழியில் நடந்து நல்வாழ்வாக வாழ்வதற்கும் சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னும் நான்கு படியும்ஏறி முத்தியடைவதற்கும் இந்நூல் பெருந்துணை புரியுமென்பது நன்கு விளங்கும்.

R. செல்லம்பிள்ளை.

தெய்வ பயம் தெய்வ பக்தி

நாம் மானிடராய் ஜனித்தது எதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமென்றும் முக்கியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டும்.

உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லா
முடம்பினி லுத்தமனைக் காண் என்றும்
மாசற்ற கொள்கை மனத்திலடைந்தாக்கால்
ஈசனைக்காட்டு முடம்பு என்றும் ஔவையார் அவரது குறளில் கூறியுள்ளார்.

எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவிதா
னியாதினு மரிதரிது கா
ணிப்பிறவிதப்பினு லெப்பிறவிவாய்க்குமோ
வேதுவருமோ வறிகிலேன்
கண்ணகனிலத்து நானுள்ளபொழுதேயருட்
ககன வட்டத்தினின்று
காலூன்றி நின்று பொழி யானந்தமுகிலொடு
கலந்து மதியவசமுறவே
பண்ணுவது நன்மை என்றும்

வஞ்சகமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கு
மஞ்சியுனை யடைந்தேனையா பராபரமே என்றுந்
தாயுமானவர் பாடியுளார்.

ஆகையால் நாம் உலகத்தின்கண் உதித்ததே உத்தமனை காண்பதற்காகவென்று விளங்குகிறது. அதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். இதற்கு முக்கியம் பக்தி. உலகசுகதுக்கங்களில் விருப்பு வெறுப்பற்று ஈசனைக்காணும்பொருட்டு உண்மையான பிரீதியாய் அவரைத்தியானிப்பது பக்தி. இதுதான் முக்தியடைய இலகுவான வழி. பக்திவலையில் படுவோன் காண்க என்றுமாணிக்கவாசகசுவாமிகள் திருவாசகத்தில் பாடியுளார்.

பக்தி பண்ணிக் கொண்டிருந்தால் முக்திபெறலாமே, பச்சைமரத்தாணிபோலே பதிந்துமனம்நாடி, இச்சையொழிந் ததைம்புலன்களைந்துகளும்வாடி ஏகரசமான பரிபூரணத்தைத்தேடி என்றும் பெரியோர் பாடியுள்ளார்.

உலகத்தில் நம்மாலாகுங் காரியமொன்றுமில்லை எல்லாம் பகவானால் நடந்தேறுகிறதென்று நிச்சயித்து அவரிடத்தில் பிரியம் வைப்பது பக்திவழி. இதற்குமுன் அவரிடத்து பயங்கொள்வது தான் முக்கியம். அதாவது நமதுசெய்கைகளெல்லாம் அவர் எங்கும் வியாபியாயிருந்து தெரிகிறார் ஆகையால் நாம் துன்மார்க் கமானகாரியம் செய்யலாகாதென்றபயம், அதுவே பக்தியை பெருக்கமாக்கும்

வஞ்சித்தொழுகுமதியிலிகாள்யாவரையும்
வஞ்சித்தோமென்று மகிழன் மின்—வஞ்சித்த
எங்குமுளனொருவன் காணுங்கொலென்றஞ்சி
அங்கங்குலைவதறிவு என்றும் பெரியோர் பாடியுள்ளார்

அப்படிபயமுண்டானால் மாசற்ற கொள்கைமனதில் ஏற் படும். பயம்பக்திக்கழகு யென்ற பழமொழியுமுள. இதற்கு உதாரணம்.

ஒருவன் தன் பிள்ளையைபடிக்கவைத்து சர்வேசுரன் எங்கு மிருக்கிறான் என்று அப்பிள்ளை தெரிந்த பின்பு தன் தொழிலாகிய திருட்டுக்கு அழைத்துப்போய் தான்கன்னம் போட்டு வீட்டுக்குள் நுழைந்து அப்பிள்ளையை கன்னவாசலண்டைநிறுத்தி யாராவது பார்க்கிறதாயிருந்தால் தகவல்கொடு என்று சொல்ல அப்பிள்ளை பார்க்கிறார் என்றான் உடனேபதைபதைத்து வெளியேவந்து யார் பார்க்கிறார் யென்றபோது கடவுள் பார்க்கிறாரென்று பிள்ளை சொல்ல அன்றுமுதல் தகப்பனுக்குப்புத்திவந்து களவுத்தொழிலை நிறுத்தினான்.

விஷ்ணுபக்தர்களான கபீர்தாஸ், ராமதாஸ் முதலியவர் களும் சிவபக்தர்களான நந்தனார் முதலிய 63 நாயன்மார்களும் இன்னும் அநேகரும் பக்தியினாலே முக்தியடைந்திருக்கிறார்களென் பது புராணங்களால் விளங்குகின்றது.

358

உலகத்தில் மனிதர்கள் மேன்பாடடையும்விதம்.

நாம் உலகத்தின்கண் மேன்பாடைய மூன்றுமுறைமைகளைக்கைக்கொள்ளவேண்டும். அதாவது உண்மை, பொறுமை, தாழ்மை.

(1) உண்மை (உதாரணம்) அரிச்சந்திரர் தன்னை விஸ்வாமித்திரர் எவ்வளவோ சோதனைசெய்தும் எவ்வளவோ ஹிம்சைக்குட்படுத்தியும் பொய்சொல்லாது உண்மையையே சொன்னதினால் அவருக்கு பின் எத்தனையோமானிடர்கள் உற்பத்தியாகியும் அவர் காலஞ் சென்று எத்தனையோ யுகாந்தகாலமாகியும் இன்னும் மேம்பாடாக அவர்புகழ்ந்து பேசப்படுகிறார். உண்மைக்கு அழிவில்லை யென்றும் பழமொழியுள.

(2) பொறுமை (உதாரணம்) தர்மர் தன்னைத் துரியோதனர் எவ்வளவோ ஹிம்சைப்படுத்தியும், அடாதசெய்கைகளைச்செய்தும் அவைகளை எல்லாம் பொறுத்திருந்ததினால் அவருக்குப்பின் எத்தனையோ மானிடர்கள் உற்பத்தியாகியும் அவர் காலஞ்சென்று எத்தனையோ யுகாந்தகாலமாகியும் இன்றும் மேம்பாடாக அவர் புகழ்ந்து பேசப்படுகிறார். பொறுமை கடலினும் பெரிது என்றும பழமொழியுள.

(3) தாழ்மை (உதாரணம்) பரதர் தனக்கு அயோத்திச் சக்கரவர்த்திப்பட்டம் ஏற்பட்டும் ஸ்ரீராமர் அப்பட்டம் அடையாமல் காட்டிற்கு சென்றாலும் அவரிடம் தான் சென்று அவருக்கு தான் தாழ்மையானவனென்று காட்டி அவரது பாதரக்ஷையை பெற்று அதை தன தலைமேல் சுமந்துகொண்டுவந்து பூஜைதபண்ணிக்கொண்டிருந்ததினால் அவருக்குப்பின் எத்தனையோமானிடர்கள் உற்பத்தியாகியும் அவர்காலஞ்சென்று எத்தனையோயுகாந்தகாலமாகியும் இன்றும் அவர் மேம்பாடாக புகழ்ந்துபேசப்படுகிறார். தாழ்ந்தது தங்கம் உயர்ந்தது பித்தளை என்றும் பழமொழியுள.

உலகத்தில் மனிதர்கள் செய்ய வேண்டிய முக்கியமான தானம்

உலகத்தில் மனிதர்கள் செய்யவேண்டிய முக்கியமான தானம் அன்னதானமே.

தானத்தில் உயர்வானதும் அதுவே. பூமி, பொருள் முதலிய மற்றெந்த தானம் கொடுத்தாலும் ஒருவருக்கு போதுமென்ற திர்ப்தி வராது. சாஸ்தியே விரும்புவார்கள். ஒருவருக்கு வயிறுநிறைய சாப்பிடும்படி அன்னம் போட்டால் அதற்குமேல் வயிறு கொள்ளாது போதும், போதும்; மனப் பூர்வமாக திர்ப்தியென்றும் சொல்லிவிடு வரர்கள். அன்னதானத்துக்கு சமானமான தானமில்லை யென்றும் பெரியோர் கூறியுள்ளார். அன்னமயம் பிராணமய மென்றும் பழ மொழியுள. அன்னவலையில் அரனகப்படுவாரென்றும் பெரியோர் கூறியுள்ளார்.

"கண்ணனை வாவெனக்கருதினர்,
கமல நான்முகர்க்கு சென்னியைச் சற்றசைத்தனர்,
தேவர்கோன்றனக்கு நன்னய கரத்தாலமைத்தனர்,
அன்ன மிட்டவன் வந்தனன் அரன் எழுந்தழைத்தார்"

என்றும் பெரியோர் கூறியுள்ளார்.

அறஞ் செய விரும்பு, ஐயமிட்டுண் என்றும் ஔவையார் அவரது ஆத்திச்சூடியில் கூறியுள்ளார். அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி அரும்பசி எவர்க்கு மாற்றி" என்றும் பெரியோர் கூறியுள் ளார். அன்னதானம் செய்தலே ஜீவகாருண்யமாகும். இதை நிஷ்காமிய புண்ணிய மென்றும் சொல்வர். இதனால் அன்பு பெருகும். சித்த சுத்திவரும். மோட்சம் கிடைக்கும். இளையாங்குடிமாற நாயனர் முதலிய அநேக நாயன்மார்களும் அநேக பக்தர்களும் அன்னதானம் செய்ததினல் ஈசன் திருவருள்கிடைத்து முக்தியடைந்திருக்கிறார்க ளென்பது புராணங்களால் விளங்குகின்றது.

உலகத்தில் மனிதர்களில் உயர் குலத்தோர்

உலகத்தில் மனித சிருஷ்டியில் கடவுளால் ஆண், பெண், என்று இரண்டு பிரிவாகத்தான் பிரிக்கப்பட்டிருக்கிறது.

மனிதர்களால் தொழில், ஆசார அநுஷ்டானங்களுக்குத் தக்கபடியான சாதிப்பிரிவினையும், சிலர் கொள்கைக்குத்தக்கபடி புத்த மதஸ்தர், கிறிஸ்து மதஸ்தர், மகமதியமதஸ்தரென்றும் இன்னும் பல சாதிப் பிரிவினையும் ஏற்பட்டிருக்கின்றது.

ஆனல், சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதிவழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கிலுள்ளபடி என்று நல்வழியில் ஔவையார் கூறியுள்ளார்.

இதனல் இவ்வுலகத்தில் சாதி இரண்டே என்றும் நீதிவழுவா நெறிமுறையில் இட்டார் பெரியோர் என்னும் நீதிவழுவா நெறிமுறையில் இடாதார் இழிகுலத்தோர் என்றும் அதாவது நீதி தவருத சன்மார்க்கவழியில் மனதைஇட்டு நடக்கின்ற சன்மார்க்கிகள் உயர்ந்த சாதியார் என்றும், நீதிதவருத சன்மார்க்கவழியில் மனதை இடாது துன்மார்க்கவழியில் மனதைஇட்டு நடக்கின்ற துன்மார்க்கிகள் இழிந்தசாதியா ரென்றும் பொருள்படும். இது எல்லோராலும் அங்கீகரிக்கத்தக்கது. தவிறவும் ஒழுக்கம் உயர்குல மென்றும் பழமொழியுள. ஆகையால் சன்மார்க்கிகளான நல்லொழுக்க முள்ளவர்களே உயர்குலத்தோராவார்கள். அவர்கள்தான் உயர் குலத்தோரென்று எல்லோராலும் நன்குமதிக்கப்படுவார்கள்.

ரிஷிமூலமும் நதிமூலமும் கேட்டு கேவலமாக மதிக்ககூடாதென்றும் பெரியோர் கூறியுள்ளார்.

தவிரவும் நந்தனார் பறையராயிருந்தும் அவரது சன்மார்க்க நடையும் பக்தியுமே அவரை பிர்மக்ஞானி பிராம்மண என்ற பிர்மசொரூபமடையும்படி செய்து ஈசுவரனிடம் ஐக்கியமானதாயும்! ஸ்ரீரெங்கத்தில் சன்மார்க்க நடையிலும் பக்தியிலும் சிறந்த திருப்பாணஆழ்வார் என்ற பறையரை ஸ்ரீ ரெங்கநாதர் உத்திரவுப்படி அக்கோயில் திருமஞ்சன தீர்த்தம் கொண்டுவரும்பட்டர் தோளில் சுமந்து கொண்டுவந்து சந்நதியில்விட அப்பெருமான் தன்னிடம் ஐக்கியப்படுத்திக் கொண்டதாகவும் புராணங்களால் விளங்குகின்றது.

நாற்படி விரிவுரை.

முக்தி அடைதற்கு நான்கு படி உண்டெனப் பெரியோர் கூறியுள்ளார். அதாவது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாம். பெரியோர்களின் மகா வாக்கியங்களினாலும், உலக அநுபோகத்தினாலும் தெரிந்துகொண்டபடி அவைகளுக்கு "விரிவுரை" கூறியிருக்கின்றேன்.

1. சரியை—நித்தியமிது, அநித்திய மிதுவெனவும், சன்மார்க்க மிது, துன்மார்க்க மிதுவெனவும், கல்வியினாலும், கேள்வியினாலும் தெரிந்து, ஆசைகொண்டலையும் மனதை அடக்குவது.

2. கிரியை—தெரிந்துகொண்டபடி மனதை அடக்கிச் சன்மார்க்க வழியில் நடந்து, ஈசனிடம் பற்றுதலாயிருப்பது.

3. யோகம்—மனமடங்கிச் சன்மார்க்கவழியில் பிசகாது நடந்து, இச்சை யொழித்து, ஈசனிடம் சதா பற்றுதலாயிருப்பது.

4. ஞானம்—மனமடங்கியபடி சன்மார்க்கவழியில் நின்று அதன் பலனாக ஈசனைக் காணும் பிரகாசமடைந்து, தானே தான் என்ற தற்பரமாயிருப்பது.

அலையுமனத்தை யகத்தடக்குமவனே சரியை கடந்தோனும்
அலையுமனத்தை யகத்தடக்குமவனே கிரியை முடித்தோனும்
அலையுமனத்தை யகத்தடக்குமவனே யோகத் தத்பரனும்
அலையுமனத்தை யகத்தடக்குமவனே ஞானி யதிசூரன்—என்று

பெரியோர் கூறியுள்ளார்.

உலகத்தில் மனிதர்களுக்கு சற்சங்கம் அவசிய மென்பதும், அதன் நன்மையும்.

உலகத்தில் மனிதர்கள் நல்லொழுக்கத்தில் முன்னேற்றமடைய முக்கியமாய் சற்சங்கம் வேண்டும். அதுதான் நன்மைதரும்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று"

என்று ஔவையார் அவரது மூதுரையில் பாடியுள்ளார். அதாவது நல்லோரை அடைதலே நன்று என்ற கருத்து. யாதேனும் வெறுந் துரும்பனே னென்னினுங்கைவிடத னீதியோ தொண்டரொடு கூட்டுகண்டாய்" என்று தாயுமானவர் பாடியுள்ளார். அதாவது அடியார்களை அடுக்கவேண்டுமென்ற கருத்து. "சான்றோரினத்திரு" என்றும், "பெரியாரைத் துணைக்கொள்" என்றும் ஔவையார் அவரது ஆத்திச்சூடியில் பாடியுள்ளார். அதாவது பெரியோரை அடுத்து வாழ என்ற கருத்து. தவிறவும்,

"தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை"

என்றும் திருவள்ளுவர் அவரது குறளில் கூறியுள்ளார். அதாவது அறிவிற் தம்மினும்மிக்கோராயடைந்து அவர் வழி நடத்தல் எல்லா வலிமையினும் பெரிது என்ற கருத்து.

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர் தம்மருண்ட தன்மையை மாற்றுவர்" என்று ராமாயணத்தில் வனிக்காட்சி படலத்தில் கம்பர் பாடியுள்ளார். மகா மேருவை அடுத்த காகமும் பொன்னிறமென்றும், பூவாலே நாரும் மணம் பெற்றால் போல என்ற பழமொழிகளுமுள.

800 009 170492 Q2:417 143

"காணரிய பெரியோர் கடரிசனம் லபிப்பதே

கண்ணிணைகள்செய் புண்ணியம்

கருணையாயவர் சொன்மொழி கேட்டிட லபிப்பதே

காதுசெய்திடு புண்ணியம்

பேணியவர் புகழையே துதிசெய லபித்திடுதல்

பேசில்வாய்செய் புண்ணியம்

பிழையாமலவர் தமைத் தொழுதிட லபிப்பதுகை

பெரிதுசெய்திடு புண்ணியம்

வினைறி செலாமலவர் பணிவிடை லபிப்பதுதன்

மேனிசெய்திடு புண்ணியம்

விழைவொடவர் சொற்படி நடந்திட லபிப்பதே

மிக்கபூருவ புண்ணியம்"

என்று அம்பலவாணக் கவிராயர் அவரது அறப்பளி சுரசதகத்தில் பாடியுள்ளார். அதாவது பெரியோரைச் சார்ந்திருப்பதே புண்ணியம் என்ற கருத்து. அதுதான் நல்வழியில் நடப்பதற்கு வலிமையைக் கொடுக்கும். தீயவழி செல்லவிடாது. முக்தியடையும் படியும் செய்யும். தவிரவும்,

"சற்சங்கத்துவே நிர்ச்சங்கத்துவம்

நிர்ச்சங்கத்துவே நிர்மோகத்துவம்

நிர்மோகத்துவே நிர்ச்சலசித்தம்

நிர்ச்சலசித்தே சீவன்முத்தர்"

என்று பெரியோர் கூறியுள்ளார். அதாவது சீவன் முத்தராவதற்கும் சற்சங்கமே ஆதாரமென்ற கருத்து.

உலகத்தில் மனிதர்களுக்கு முக்கியமான துணை.

உலகத்தில் மனிதர்களுக்கு முக்கியமானது துணை, கல்வியே.

"அறம்பொரு ளின்பமும் வீடும்பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங் கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை."

என்று குமரகுருபர சுவாமிகள் அவரது நீதிநெறி விளக்கத்தில் பாடியுள்ளார். அதாவது மனிதர்களுக்கு நல்ல கீர்த்தியையும், பொருளையும், இன்பத்தையும், சன்மார்க்கத்தையும், மோக்ஷத்தையும் கொடுப்பதற்கும் கவலையுற்றபோது ஆதரவாயிருப்பதற்கும், கல்விதான் முக்கியதுணை என்ற கருத்து. உலகப்பொருளுக்கு திருடர்கள் பயமுண்டு கல்விப்பொருளுக்கு அப்படிப்பட்ட பயம் கிடையாது.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

என்று திருவள்ளுவர் அவரது குறளில் கூறியுள்ளார்.

ஆகையால் கல்வி ஆண், பெண் இருவருக்கும் அவசியமானது தவிரவும், "கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே," என்று ஆத்திச்சூடியில் ஔவையார் கூறியுள்ளார்.

"கற்றோர்க்கு கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகு செய்வார்"

என்று நீதிநெறி விளக்கத்தில் குமரகுருபர சுவாமிகள் பாடியுள்ளார். அதாவது கற்றோர்க்கு கல்விதான் ஆபரணமென்ற கருத்து.

"மன்னனு மாசறக் கற்ரோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்ரோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்ரோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு"

என்று மூதுரையில் ஔவையார் கூறியுள்ளார். அதாவது மன்னனுக்கு தன்தேசத்தில்தான் சிறப்பு கற்ரோர்க்கு எங்கும் சிறப்பென்ற கருத்து.

தவிறவும் ஒரு தேசத்தில் ஒரு தகப்பன் தன் பிள்ளைகள் இரண்டு பேர்களில் ஒருவனுக்கு ஏராளமாக பொருள் கொடுத்தான். மற்றொருவனுக்கு தக்ககல்வி கற்கும்படி செய்தான். பொருளை அடைந்தவன் அதைத் தன்னிஷ்டம்போல் செலவுசெய்து ஏழையானன். கல்வி கற்றவனே தன் கல்வித்திறமைபால் அத்தேசத்தரசனுக்கு மந்திரியாகி கீர்த்தி அடைந்து ஏராளமாகப் பொருளும் சம்பாதித்துக்கொண்டான், தன் சகோதரன் தரித்திர நிலைமையிலிருந்தவனையும் தன்னிடம் வைத்து ஆதரித்தான். இதைகண்ட தகப்பன் கல்வியே ஒருவனுக்கு பெருந்துணையென்று தெரிந்து சந்தோஷித்தானென்று ஓர் சரித்திரமுமுண்டு.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபி
னிற்கவ தற்குத்தக" என்றும்
"கற்றதனு லாயபய னென்கொல் வாலறிவ
னற்ரு டொழா அரெனின்"

என்றும் திருவள்ளுவர் அவரது குறளில் கூறியுள்ளார்.

"கற்று மென்பலன் கற்றிடு நூன்முறை
சொற்ற சொற்கள் சுகாரம்ப மோநெறி நிற்றல்வேண்டும்"

என்று தாயுமானவர் பாடியுள்ளார்.

அதாவது கல்விகற்றுக்கொள்வதின் பயன் அக்கல்வியில் தெரிந்துகொண்ட சன்மார்க்க வழியில் நடப்பதற்கும் ஈசனை வழிபடுதலுக்கும் என்ற கருத்து. அதுதான் முத்தி சார்வதற்குமிடமாகும்.

உலகத்தில் மனிதர்களுக்கு முக்கிய ஆதாரம்.

உலகத்தில் மனிதர்களுக்கு முக்கிய ஆகாரம் அன்பு. ஜீவர்களிடம் பற்றுதலாயிருப்பதற்கு அன்புதான் வேண்டும். அன்பில்லாவிட்டால் ஜீவர்களிடம் மனிதர்கள் ஜீவகாருண்யர்களாயிருக்க முடியாது. இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர்க்கண்மேல் பற்றுதலாயிருத்தலும் அன்பின் பயனாகும். அன்பு ஆதாரவுயென்றும், அன்பிலார் கண்ணிலார் என்றும் பழமொழிகளுமுள.

ஓர் காட்டில் ஓர் அரசனால் வேட்டையில் ஓர் பன்றி அம்புபட்டிறந்திட அப்பன்றியின் குட்டிகள் தாயில்லாததினால் பாலுக்குகதறி தவித்துக்கொண்டிருந்தன. ஈசன் அப்பன்றிக்குட்டிகளிடம் அன்பு கூர்ந்து தானே அவைகளின் தாய்ப்பன்றியினுருவெடுத்து அக்குட்டிகளுக்குப் பால் கொடுத்து காப்பாற்றினாரென்றால் அவரது காருண்யம் அளவுக்கடங்காததல்லவா? இப்பெருந்தகைமையைப்பற்றி

"ஏவுண்ட பன்றிக் கிரங்கி யீச
னெந்தை பெருந்துறை யாதி யன்று
கேவலங் கேழலாய்ப் பால் கொடுத்த
கிடப்பறிவா ரெம்பிரா னாவாரே" என்று

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பாடியுள்ளார்.

"அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு" என்று திருவள்ளுவர் குறளில் கூறியுள்ளார். அதாவது அன்புடையவர்களை உயிருள்ள உடம்புடையவர்களென்றும், அன்பிலாதவர் உடம்பு உயிரில்லாத உடம்பென்றும் கருத்து

"என்னுடை யன்பெனு நெறியாம்" என்றும் "மோனமாம் வித்தை பதித்தன்பு நீராகவே பாய்ச்சி என்றும்" தாயுமானவர்பாடியுள்ளார். ஆகையால் மனிதர்கள் இல்வாழ்க்கையைச் செவ்வனே நடத்துவதற்கும் ஈசனருளைப் பெறுவதற்கும் அன்புதான் ஆதாரம்.

தவிரவும், காடுங் கரையுமனக்குரங்கு கால்விட்டோட
வதன்பிறகே, யோடுந் தொழிலாற்பயனுளதோ
வொன்றாய் பலவாயுயிர்க்கு யிரா
யாடுங் கருணைப்பரஞ் சோதியருளைப்
பெறுதற் கன்புநிலை தேடும்பருவ
மிதுகண்டீர் சேரவாருஞ் செகத்தீரே" என்று

தாயுமானவர் பாடியுள்ளார். அதாவது மானிட ஜென்மத்தில் அருளைப் பெறுதற்கு அன்பு நிலையைஅடையுங்களென்ற கருத்து. "அருளென்னு மன்பின் குழவி" என்றும் "அருளிலார்க் கவ்வுலகமில்லை" என்றும் பெரியோர் கூறியுள்ளார். ஆகையால் அருளுக்குத் தாயான அன்பையுள்ளவர்களை ஈசனருளைப் பெற்று முக்தியடைவார்கள்.

ஈசனை நாடும் பலம்

"ஈசனை நோக்க நோக்க இம்மையிற் பாவந் தீரும்
ஈசனை நோக்க நோக்க விருதயம் நலத்துட் சாரும்
ஈசனை நோக்க நோக்க வின்பலாற் றுன்ப மில்லை
ஈசனை நோக்க நோக்க விதயமே யீசனுகும்
ஈசனை நோக்க நோக்க இருப்பர் நம்முள்ளத்தி லென்றும்
ஈசனை நோக்க நோக்க விருதயங் கோயிலாகும்
ஈசனை நோக்க நோக்க விருதய நலமே வீடாம்
ஈசனை நோக்க நோக்க விறப்பொடு பிறப்பிலின்பாம்." என்றும்,

"எல்லாம் படைத்தார் மனுவுக்காக, மனுவைப் படைத்தார் தன்னை வணங்க" என்றும், "தன்னை யறிந்தவர் தம்மைத் தானுகச் செய்தருளுஞ் சமர்த்தன்" என்றும் பெரியோர் கூறியுள்ளார். "பற்றலாம் பொருளை பாம்பற்றினுலுற்ற மாதவர்க்குண்மையை நல்குமே" என்றும், "நேசத்தானின்னை நினைக்கு நினைவுடையா ராசைக் கடலிலழுந்தார் பராபரமே" என்றும், "கற்றைவார் சடைக்கண்ணுதல் பாதமேபற்ற தாயிற் பரசுகம் பற்றுமே" என்றும் தாயுமானவர் பாடியுள்ளார்.

மெய்ஞ்ஞானி மகிமை.

"மெய்ஞ்ஞான முடையனோர் மாணிக்கமாம்" என்று அறப்பளீசுரர் சதகத்தில் அம்பலவாணக் கவிராயர் பாடியுள்ளார் அதாவது, ஈசனருள் பெற்ற மெய்ஞ்ஞானி ஒப்பற்ற மாணிக்கமென்ற கருத்து.

"கற்றைவார் சடைக் கண்ணுதலோ னருள் பெற்றபே ரவரே பெரியோர்" என்று தாயுமானவர் பாடியுள்ளார். அதாவது ஈசனருள் பெற்ற மெய்ஞ்ஞானிகள் பெரியோர் என்ற கருத்து,

"அரியது செய்வர் பெரியோர்" என்று திருவள்ளுவர் குறளில் பாடியுள்ளார். "முக்கட் புனிதன் சரண்புகுந் தோர்க்கென் முடியாதேது முளதே" என்று தாயுமானவர் பாடியுள்ளார். அதாவது, மெய்ஞ்ஞானிகள் சர்வ வல்லமையுடையவர்களென்ற கருத்து.

"இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். அதாவது நல்வினை தீவினை யென்னு மிரண்டு வினையும் மெய்ஞ்ஞானிகளை அணுகாது என்ற கருத்து இக்கருத்துக் கொண்டே "ஈசனும் ஞானியும் மொன்றே" என்றும், "ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்" என்றும் பெரியோர் கூறியுள்ளார். தவிரவும்

"தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான், மனக்கவலை மாற்ற லரிது" என்று திருவள்ளுவர் குறளில் பாடியுள்ளார் அதாவது ஈசனருள்பெற்ற மெய்ஞ்ஞானிகள் தான் மனக்கவலையை மாற்றிக்கொள்ள முடியுமென்ற கருத்து.

"ஓர் பாமுண்டது சிவமுண்டது" என்றும் "உண்டது ஞானி உலகெலாம் திருப்தியாம்" என்றும் பெரியோர் கூறியுள்ளார்.

ஞானக்கதம்பம் முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
3	3	மேன்பாலடைய	மேன்பாடடைய
,,	20	(உதாணாப்)	(உதாரணம்)
7	11	வெறுஞ்	வெருக்
,,	20	கோளா	கோவை
,,	23	வணிக்	வரைக்
8	5	லாத்திடு	லைத்திடு
,,	7	திடலிப்பது	திடலைப்பது
,,	13	சகத்தில்	சதகத்தில்
,,	19	நிற்	நிர்
9	18	ஆத்திச்சூடியில் ஔவையார்	வெற்றிவேற்கையில் அதிவீரராமபாண்டியன்
11	1	ஆதாரம்	அதாரம்

600 009
170492